செ.வெ.எண்:11/பிப்ரவரி நாள்:06.02.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு மொத்தம் ரூ.12,15,000/- மதிப்பில் பரிசுகள் மற்றும் கோப்பைகளை

## மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள் வழங்கினார்.

-------------

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கில், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்துறை அமைச்சர் டாக்டர்.எஸ்.சுந்தரராஜ் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக, தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு இன்று (06.02.2016) பரிசு மற்றும் பதக்கங்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாணவ, மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக கல்வித்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். மாணவ, மாணவியர்களின் கல்விக்காக மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் அவர்கள் ஆர்வத்தினை ஊக்குவித்து தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்திட ஏதுவாக விளையாட்டுத் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக விளையாட்டு வீரர் வீராங்கனைகள், சர்வதேச, தேசிய மற்றும் மாநில அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்திட ஏதுவாக, விளையாட்டுப் போட்டிகளின் நுணுக்கங்களை கற்றுக் கொள்ளும் வகையில் 125 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கிராமப்புறங்களிலுள்ள விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்திட தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ஊராட்சி அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு மட்டும் இப்போட்டிகளுக்காக ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடத்தப்பட்டுள்ளன. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், கடலோர கிராமங்களில் கடற்கரை விளையாட்டுப் போட்டிகள் என்பன போன்ற சிறப்பு விளையாட்டு போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் மாணவ மாணவியர்களுக்கு வேற்றுமை உணர்வு அகன்று, ஒற்றுமையுணர்வு, நாட்டுப்பற்று, சகோதர உணர்வு, தன்னம்பிக்கை, விடாமுயற்சி ஆகிய உணர்வுகள் மேலோங்குகின்றன.

இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பாக, 04.02.2016 முதல் 06.02.2016 வரை தமிழ்நாடு மாநில அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையே வாலிபால், டென்னிஸ், மேசைப்பந்து, இறகுபந்து உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு இன்றைய தினம் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு முதல் பரிசாக தலா ஒருவருக்கு ரூ.10,000/-, இரண்டாம் பரிசாக தலா ஒருவருக்கு ரூ.7,500/-, மூன்றாம் பரிசாக ரூ.5,000/- வீதம் மொத்தம் ரூ.12,15,000/- மதிப்பில் பரிசுகள் மற்றும் கோப்பைகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். விளையாட்டு வீரர், வீராங்கணைகள் இத்தகைய போட்டிகள் மட்டுமல்லாது சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்களை வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசினார்.

இவ்விழாவில், உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சர்வேஷ்ராஜ், இ.கா.ப., மாவட்ட விளையாட்டு அலுவலர் முனைவர்.கே.சேவியர் ஜோதிசற்குணம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முதுநிலை மேலாளர் (சென்னை) திரு.வெ.வாழ்வீமராஜா, (மதுரை) திரு.எஸ்.தமிழ்ச்செல்வன், மண்டபம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.முனியம்மாள் முனியசாமி, மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஜெயஜோதி, செய்யதம்மாள் பொறியியல் கல்லூரி முதல்வர், உடற்கல்வி ஆய்வாளர் திரு.பிரசாத், உட்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், பயிற்சியாளர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படங்கள் & வெற்றி பெற்றவர்களின் பட்டியல் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**